**இலங்கை கலைக் கழகம் – 2017**

இலங்கை கலைக் கழகம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 44 ஆம் இலக்க இலங்கை கலை சபை (திருத்திய) சட்டத்தின் 15(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கழகத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கழகத்தின் உள்ளகக் கட்டுபாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சம்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கலைக் கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையை அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துறைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

நியமத்தின் 21 மற்றும் 22 பிரிவுகளின் பிரகாரம் செயற்படு இலாபத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தாத கூட்டுத்தொகை ரூபா 462,169 தொகைக்கான முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள், காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கல் என காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் பயன்தகு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக ரூபா 306,441 தொகை கிரயத்தையுடைய அலுவலக உபகரணங்கள் முற்றாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 9**

நியமத்தின் 47(அ) பிரிவின் பிரகரம் இருப்புக்களை கணிக்கும் போது கடைபிடித்த கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்த வேண்டுமெனினும் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 404,288 தெகைக்கான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் இருப்பு தொடர்பாக கணக்கீட்டு கொள்கையினை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிறுவனத்தினால் மீளாய்வாண்டு முதல் ஊழியர்களின் பிற்பட்ட நலன்களுக்கான ஒதுக்கங்கள் செய்திருந்த போதிலும், ஆண்டிற்கான ஒதுக்கத் தொகையை கணிப்பதற்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இல் 15 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தை வடிவமைக்கும் நிறுவனங்களின் அண்மைகால கூற்றுக்களின் பிரகாரம் எதிர்கால ஊழியர்களின் சம்பளம் அதிகரிப்பு, கழிவு விகிதாசாரம் ஊழியர் புரழ்வு மற்றும் ஏனைய ஆயுட்கணிப்பு, அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டு கொள்கை ஒன்று தயாரித்துக் கொள்ளவேண்டுமெனினும் அவ்வாறான கொள்கையொன்று தயாரிக்காமல் ஊழியர்கள் இறுதியாகப் பெற்றிருந்த சம்பளத்தையும் சேவைக் காலத்தையும் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஐந்து ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது

பணிக்கொடையாக கூட்டுத்தொகை ரூபா 632,000 தொகை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 264(1) | அனைத்து கொடுப்பனவுகளும் பண உறுதிச்சீட்டில் குறிப்பிட்டுள்ள மொத்தத் தொகை கிடைத்ததென பணம் பெறுவோரினால் பெற்றுக் கொள்ளப் பட்ட பற்றுச்சீட்டு ஒன்றினால் உறுதிப் படுத்தப்பட வேண்டுமெனினும் மனித வள உரிமை கலை விழாவிற்கு பங்குபற்ற வந்திருந்த மூவருக்கு தங்குமிட வசதிகள் வழங்கியது தொடர்பாக செலுத்தியிருந்த ரூபா 58,000 இற்கான அறை வாடகை தொடர்பாக சிட்டைகள் சமர்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 381 (1) | உத்தியோகபூர்வ வங்கி கணக்கு ஒன்று ஆரம்பிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனினும் நிறுவனத்திற்காக அரச வங்கி ஒன்றில் ஆரம்பித்திருந்த நடைமுறை கணக்கிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (இ) | நிதிப் பிரமாணம் 384(2) | அனைத்து காசோலை குறுக்குக் கோடு இடப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது கலை சபையின் நடைமுறை கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,911,498 தொகைக்கான கொடுப்பனவுகளுக்காக குறுக்குக் கோடிடப்படாத காசோலைகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகராம் மீளாய்வாண்டிற்கான நிதிவிளைவுகள் ரூபா 552,126 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 79,604 தொகையாக காணப்படாமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 631,730 இற்கான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக

கிடைத்திருந்த நிதி ஏற்பாடுகள் ரூபா 1,435,000 தொகை அதிகரித்திருந்த போதிலும், நிருவாக மற்றும் தாபன செலவுகள் ரூபா 203,370 தொகை அதிகரித்திருத்தல், சம்பளங்கள் மற்றும் வேதனங்களும் ஊழியர் நலன்களும் ரூபா 276,314 இனால் அதிகரித்திருத்தல் மற்றும் செயலமர்வுகள், நிகழ்ச்சி திட்ட செலவுகள் மற்றும் ஆதரவு வழங்குதல் ரூபா 1,624,384 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினது நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது நிதி மிகை ஒன்று காணப்பட்ட போதிலும் 2013 மற்றும் 2014 மற்றும் மீளாய்வாண்டின் போது நிதிப் பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டிருந்தது. எனினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 292,428 இற்கான பங்களிப்பு 2016 ஆண்டின் போது ரூபா 2,021,305 தொகை ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வருடாந்த இலக்குகளும் அவ் இலக்குகளுக்காக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களையும் குறிப்பிட்டு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் சபையினால் தயாரிக்கபட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் அதன் பிரகாரம் தயாரித்திருக்கவில்லை.

#### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

நிறுவனத்தின் குறிக்கோள்களை நெருங்குவதற்காக மீளாய்வண்டின் போது உரிய நிதி ஏற்பாடுகள் கிடைத்திருக்காமையினால் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 37 நிகழ்ச்சி திட்டங்களில் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 153.26 மில்லியனை கொண்ட 23 நிகழ்ச்சி திட்டங்களை செயற்படுத்துவதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலை சபையின் கொழும்பில் அமைந்துள்ள அலுவலகம் 2016 மார்ச் மாதம் முதல் செத்சிரிபாய அலுவலகத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் பழைய அலுவலகத்தின் தொலைபேசியின் சிட்டைகள் பெற வேண்டிய புதிய விலாசம் இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு அறிவித்தல் அல்லது தொலைபேசியை துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் திரண்டிருந்த விலைப்பட்டிற்களுக்காக 2017 ஜனவரி 23 திகதி ரூபா 11,081 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 நவம்பர் 22 ஆம் திகதி கொள்வனவு செய்திருந்த ரூபா 38,000 தொகை பெறுமதியான அச்சு இயந்திரம் பொறியும் பொறித்தொகுகளும் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருந்த போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

**4.3 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கலை சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 06 மற்றும் உள்ளவாறான பதவியணியர் 09 ஆகக் காணப்பட்டதுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மிகை பதவியணியின் 03 ஆகும்.

(ஆ) இலங்கை கலை சபைக்கு பதவியணியினர் சேர்ப்பதற்காக முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் 2011 ஆகஸ்ட் 26 ஆந் திகதி DMS/E3/ 53/4/311/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (கழகத்தின் செயலாளர்) பதவிக்காக நிரந்தர நியமனம் மீளாய்வாண்டு இறுதிவரை மேற் கொள்ளப்பட்டிருக்காததுடன் அதற்காக 2014 ஜனவரி 06 திகதி முதல் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பண்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

(இ) இரண்டாம் நிலை முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 360,000 இற்கான படி ஒன்று அந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்களை நெருங்குதல்**

நிலைபெறு தகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சி நிரழின்'' பிரகாரம் அனைத்து நிறவனத்தினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை கலை சபையினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரக் கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

**6. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 உள்ளகக் கணக்காய்வு குழு**

நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 ஏற்பாடுகளின் பிரகாரம் சபையில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒரு நிறுவி இருக்காததுடன் வரிசை அமைச்சின் மூலமும் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது என தகவல்கள் காணப்படவில்லை.

**6.2 கணக்காய்வு குழு**

2003 ஜுன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும் கலை சபையினால் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டமொன்று நடாத்தியிருக்கவில்லை.

**6.3 பாதீட்டு கட்டுபாடு**

மீளாய்வாண்டிற்காக நிறுவனத்தின் பாதீட்டுச் செலவுகள், உள்ளவாறான செலவுகளுடன் இணக்கஞ் செய்த போது 13 நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பாக 11 சந்தர்ப்பங்களில் 20 சதவீதத்தை விடக் கூடிய முரண்கள் காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுக் குறைபாடுகளை அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது கீழ்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்புகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிலையான வைப்புகளின் வட்டி சரியான முறையில் கணக்கீடு செய்யாமை. |
| | (ii) ஊழியர் பணிக் கொடை முதலீடுகள் தொடர்பாக கணக்கீட்டு கொள்கையொன்று காணப்படமை. |
| | (iii) நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்படாமல் 119 குறிப்புகள் மீளாய்வாண்டின் போது நிதிக் கூற்றுகளில் சீராக்கல் செய்துள்ளமை. |
| (ஆ) சொத்துக்கள் நிருவாகம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரை ஆக்கப்படாமை. |